காரணமாக அந்தத் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு, போலீஸ் அதிகாரி பேச்சு முறையற்றது என்று வைத்துக்கொண்டாலும், பேரவையை அதற்காகத் தள்ளிவைக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு, நான் என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

சேலம் மாவட்டம் வெள்ளையம்பாளையம் கிராமத்தில் புளிச்சை நார் உபயோகிப்போரிடமிருந்து விற்பனை வரி வசூல்

திரு. எஸ். ஆறுமுகம் : சேலம் மாவட்டம், சங்கரி வட்டம் வெள்ளையம் பாளையத்தில் குடியிருப்போர் ஆந்திர மாநிலத்தில் சித்தூரிலிருந்து புளிச்சைநார் வாங்கி வந்து கையினால் கட்டில் கயிறு திரித்து விற்றுவரும் இவர்களுக்கு 7–1–1967-ல் பொது வருவாய்த் துறை புலன் அதிகாரி விற்பனைவரியும் அபராதமும் கட்டவேண்டுமென்றும், விற்பனைக் கணக்கு கள் காட்டவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருப்பதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker Sir I may be permitted to make the following statement :—

In their petition, dated 10th April 1967 certain residents of Vellayampalayam village, Sankari Taluk, Salem district have represented to the Government about the asessment of tax under the Madras General Sales Tax Act, 1959 in respect of the transaction relating to the supply of Pulichainar (புளிச்சைநார்) used in the manufacture of ropes by them. They have stated that in the case of two persons tax has been assessed and penalty has also been levied as detailed below for the year 1961–62 ;—

		Tax.		*Penalty.*	
		RS.	P.	RS.	P.
Thiru A. Rangasamy	..	551	20	225	00
Thiru P. Lakshmanan	..	859	20	429	00

Thiru P. Perumal and Thiru C. Vedichi Gounder have been served with pre–assessment notices by the Deputy Commercial Tax Officer (Intelligence), Salem. The petitioners have also stated that these persons have been asked to produce their accounts for the years 1962—63 to 1966—67.

The petitioners have stated that the Pulichainar has been bought in Chittoor district (Andrha Pradesh) on their behalf, but booked by rail in the names of their representatives deputed for such purchase and distributed on arrival of the consignment at the village. They have represented that the levy of sales tax on these transactions will lead to their ruin. They have therefore requested that the industry may be treated as a cottage industry and exempt from liability to tax under the Madras General Sales Tax Act, 1959, as in the case of handmade soap, handmade paper, handmade matches, etc. They have also requested stay of collection of tax already levied and the action taken by the Department for assessing tax for the years 1962–63 to 1966–67.

A Copy of the above representation from the residents of Vellayampalayam was addressed to Thiru S. Arumugam, M.L.A. and copies of such representations were forwarded to Government by the member with the recommendation for the consideration of the requests of the villagers, including stay of action taken for the collection of tax levied. The Government called for a report from the Board of Revenue. Pending decision by the Government on the representation, the orders of the subordinate Commercial Taxes authorities have also been stayed. In Government letter, dated 18th May 1967 the action taken on the representation has also been conveyed to Thiru S. Arumugam, M.L.A.

The Board of Revenue has reported that the dealers who have been assessed to tax, have admitted having bought the goods themselves from the Andhra Pradesh and sold them to the manufacturers of the ropes. It is not correct to say that the hemp has been purchased in Chittoor, Andhra Pradesh, on behalf of the manufacturers and then distributed as stated by the Member. The levy of tax on the dealers is quite correct and valid. It is reported that the assessees are engaged in regular buying and selling of pulichai fibre and that the volume of business of these dealers is large and as such it should have been possible for them to mainta n accounts. The persons assessed are regular dealers and not the manufacturers. The Government have therefore decided that the facts of the case do not warrant any special treatment being given to the assessees in question.

4. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் கொண்டு வர மேன்மைமிகு கவர்னர் அவர்கள் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.*

எனவே, இம்மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த மாண்பு மிகு உணவு அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

5. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழன் : *இம்மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *இம்மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.*